<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 56/2017 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | முருகவேல் | நாள் | 13.06.2024 |
| தகப்பனார் பெயர் | சின்னதம்பி | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:-</u>

1) என் தாயார் பெயர் கோவிந்தம்மாள் ஆகும். 1ம் பிரதிவாதி உஷாராணியின் மாமியார் சகுந்தலா எனக்கு என்ன உறவுமுறை என்றால், அவர் என்னுடைய சித்தி ஆவார். வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால், வாதி என்னுடைய தாய்மாமன் ஆவார். இவ்வழக்கில் யார் யார் பிரதிவாதிகள் என்றால், உஷாராணியும், வட்டாட்சியரும் பிரதிவாதிகள் ஆவார்கள்.

2) என் பிரமான வாக்குமூலத்தில் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை, செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் என நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி வார்த்தைகள் என்னவென்று எனக்கு தெரியுமா என்றால், குறிப்பாக அந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் என்னவென்று எனக்கு தெரியாது. வாதி முனுசாமி எவ்வளவு வருடங்களாக சேலத்தில் வசித்து வருகிறார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. R.C.O.No.840/1954 குறித்து நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி R.C.O.No.840/1954 ன் படி யாருக்கு என்ன வழங்கப்பட்டது என்றால், மேட்டூர் அணை கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டபோது என் பாட்டனார் லட்சுமண கவுண்டருக்கு அதற்கு ஈடாக வேறு நிலம் மேற்படி உத்தரவின்படி, தூக்கணாம்பட்டியில் வழங்கப்பட்டது.

3) மேற்படி தூக்கணாம்பட்டியில் வழங்கப்பட்டதாக நான் சொல்லும் நிலத்தின் சர்வே எண்ணோ, நகர புல எண்ணோ எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி R.C.O.No.840/1954 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலாவது சர்வே எண்ணையோ, நகர புல எண்ணையோ பார்த்துள்ளேனா என்றால், இல்லை.

4) க.எண்.6/23 என்பதற்கு யார் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், என் பாட்டனார் லட்சுமண கவுண்டர் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது வரை என் பாட்டனார் பெயரில்தான் வரி விதிப்பு செய்யப்பட்டு வருகிறதா என்றால், இல்லை. கடந்த 2009ம் வருடத்தில் மேற்படி லட்சுமண கவுண்டர் பெயரில் இருந்த சொத்தை 3–அயிட்டங்களாக பிரித்து உஷாராணி, அமுதா, சகுந்தலா ஆகியோர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

5) மேற்படி சொத்து முழுவதும் லட்சுமண கவுண்டர் பெயரிலிருந்து மேற்படி உஷாராணி, அமுதா, சகுந்தலா ஆகியோர் பெயரில் மாற்றப்பட்டதா? அல்லது வாதி முனுசாமி பெயரிலிருந்து மாற்றப்பட்டதா ? என்றால், மேற்படி சொத்தின் ஒரு பகுதி வாதி பெயரிலிருந்தும், மற்றொரு பகுதி என் பாட்டனார் லட்சுமண கவுண்டர் பெயரிலிருந்தும் மேற்படி மூன்று நபர்கள் பெயரிலும் மாற்றப்பட்டது. மேற்படி 2009ல் உஷாராணி, அமுதா, சகுந்தலா ஆகியோர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்ட விவரம் எப்போது வாதிக்கு தெரியும் என்றால், பின்னிட்டு தான் தெரியும். வருடம் சரியாக தெரியாது.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.